**ஜனவரி – 28**

# TNPSC துளிகள்

- நாட்டுப்பற்று மற்றும் தேச கட்டமைப்பு மீதான தேசிய அளவிலான பேச்சுப் போட்டியை மத்திய அமைச்சரான ராஜ்ய வர்த்தன் ரத்தோர் தொடங்கி வைத்தார். இது இளைஞர்கள் விவகாரத்துறை அமைச்சகத்துடன் இணைந்து நேரு யுவ கேந்திரா சங்கதன் என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- சமஸ்கிருத மொழிச் சொல்லிருந்துப் பெறப்பட்ட "நாரி சக்தி" எனும் சொல்லானது 2018 ஆம் ஆண்டிற்கான இந்தி மொழிச் சொல்லாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக ஆக்ஸ்போர்டு அகராதி நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்கு பெண்களின் சக்தி (women empowerment) என்று பொருள்படும்.
- வரலாற்று சிறப்புமிக்க திக்கி அரண்மனையானது 5 நாட்கள் நடைபெறும் 12-வது ஜெய்ப்பூர் இலக்கியத் திருவிழாவை நடத்துகிறது. இந்த திருவிழாவானது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் ஜெய்ப்பூர் நகரில் நடைபெறும் வருடாந்திர இலக்கியத் திருவிழாவாகும்.
    - 2006-ல் தொடங்கப்பட்ட இத்திருவிழாவானது 2008 ஆம் ஆண்டிலிருந்து டீம்ஒர்க்ஸ் ஆர்ட்ஸ் (Teamwork Arts) என்ற நிறுவனத்தால் வழங்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## இராணுவ விமானத்திற்கான உயிரி-ஜெட் எரிபொருள்

- முதன்மை ராணுவ சான்றளிப்பு நிறுவனமான, இராணுவ பறத்தல்நிலை மற்றும் சான்றளிப்பிற்கான மையமானது (Centre for Military Airworthiness and Certification-CEMILAC) உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட உயிரி எரிபொருள்களை இராணுவ விமானங்களுக்குப் பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது.
- இந்த அனுமதியினையடுத்து இந்திய விமானப் படையானது தனது போக்குவரத்து விமானம் மற்றும் ஹெலிகாப்டர்களில் உயிரி எரிபொருளை பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- குடியரசு தின அணிவகுப்பில் முதன்முறையாக இந்திய விமானப்படையின் AN-32 ரக விமானமானது விக் & சட்லஜ் அமைப்புகளில் ('vic' & 'satluj' formation) பறந்தது. இந்த பிரம்மாண்ட நிகழ்வின் போது இதன் முன்னணி நடத்துனர் விமானத்திற்கு வழக்கமான எரிபொருள் மற்றும் உயிரி எரிபொருள் கலந்த கலவை பயன்படுத்தப்பட்டது.
- இந்த உயிரி எரிபொருள்களானது சத்தீஸ்கரில் ஜத்ரோபா தாவரத்திலிருந்து பெறப்பட்டு டேராடூனில் உள்ள CSIR-IIP இன் (Council of Scientific & Industrial Research - Indian Institute of Petroleum) ஆய்வகத்தில் உருவாக்கப்படுகிறது.

## ஒடிசா கடற்கரைப் பகுதியில் ஏவுகணை சோதனை

- ஒடிசாவின் கடற்பரப்பில் ஒரு போர்க் கப்பலிலிருந்து நீண்ட தூர தரையிலிருந்து வான்வழி இலக்குகளைத் தாக்கும் ஏவுகணை (Long Range Surface-to-Air Missile-LRSAM)

வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

- இந்த LRSAM ஆனது வெற்றிகரமாக தாழ்தளத்தில் பறக்கும் விமான இலக்கைத் தாக்கி அழித்தது.
- இந்த LRSAM ஆனது இந்தியாவின் DRDO, மற்றும் இஸ்ரேலின் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் ஆகியோரால் கூட்டாக உருவாக்கப்பட்டது.
- இந்த LRSAM ஆனது அரபிக் கடலில் நிறுத்தப்பட்டுள்ள INS சென்னையின் செயல்பாட்டு உள்ளமைப்பிலிருந்து சோதிக்கப்பட்டது.


## ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான்ஸ்க்கான புதிய விதிமுறைகள்

- ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான்ஸ்க்கான (Jan Shikshan Sansthans-JSS) புதிய வழிகாட்டுதல்களை திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர்க்கான அமைச்சகமானது (MSDE - Ministry of Skill Development and Entrepreneurship) வெளியிட்டுள்ளது.
- புதிய விதிமுறைகளானது ஜன் ஷிக்ஷான் சன்ஸ்தான்ஸ் அமைப்பை மீள் இயக்கம் செய்யவும் புத்துயிரூட்டலை மேற்கொள்வதற்கான MSDE-ன் முயற்சியின் ஒரு பகுதியாகவும் வெளியிடப்பட்டுள்ளது.
- விதிமுறைகளின் சிறப்பம்சங்களாவன:
  - கற்பித்தலை மேம்படுத்துவதற்காக தேசிய அளவில் திறமை தகுதி கட்டமைப்பிற்காக JSS திட்டம் மற்றும் பாடத்திட்டத்தை சீரமைத்தல்.
  - மாவட்ட நிர்வாகத்திற்கு கூடுதல் பொறுப்புடைமை மற்றும் சுதந்திரம் அளிப்பதன் மூலம் JSS –ன் அதிகாரங்களைப் பரவலாக்குதல்.
- JSS ஆனது கல்வியறிவற்றோர், புதிதாக கற்றோர் மற்றும் பள்ளிக்கல்வியில் இடைநின்றோர் ஆகியோருக்கு திறமைகளை அடையாளம் காண்பதன் மூலம் அவர்களின் பகுதிகளில் தேவை இருக்கும் தொழில்முறைப் பயிற்சிகளை அளிப்பதற்கும் நிறுவப்படுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியாவில் நைட்ரஜன் ஆய்வுக்கு ஐக்கிய ராச்சியம் உதவி

- இந்தியா மற்றும் தெற்காசியாவில் நைட்ரஜன் மாசுபாட்டை ஆய்வு செய்வதற்கான ஒரு ஆராய்ச்சித் திட்டத்தை ஐக்கிய ராச்சிய அரசு அறிவித்துள்ளது.




- புதிய கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ் தெற்காசிய நைட்ரஜன் மையமானது ஐக்கிய ராச்சியத்தின் சூழலியல் மற்றும் நீரியலுக்கான மையத்தின் தலைமையில் செயல்படும்.
- நைட்ரஜன் மதிப்பீட்டை நிறைவு செய்த ஒரே தெற்காசிய நாடாக இந்தியா உள்ளது. தற்பொழுது இந்தியா ஐ.நா. சுற்றுச்சூழலுக்கான தெற்காசிய மதிப்பீட்டிற்கு இணைத்

தலைமையேற்று வழிநடத்திச் செல்கிறது.

- ஐக்கிய ராச்சிய ஆய்வு மற்றும் புத்தாக்கத்திலிருநது வரும் நிதியுடன் இந்த ஐந்தாண்டுத் திட்டம் நிறுவப்பட்டுள்ளது.
- நைட்ரஜன் மாசுபாடானது வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாகும். மேலும் இது இரசாயன உரங்கள், கால்நடைகள் கழிவு மற்றும் புதைபடிவ எரிபொருட்களை எரித்தல் ஆகியவற்றின் உமிழ்வுகளால் உருவாக்கப்படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## உலகின் நீளமான முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட கான்கிரீட் பாலம்

- உலகின் நீளமான முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட கான்கிரீட் பாலம் சீனாவில் திறக்கப்பட்டுள்ளது.
- இது ஷாங்காய் நகரில் உள்ள வென்சாபேங்க் நதியின் மீது அமைந்துள்ளது.



- இப்பாலமானது சீனாவில் உள்ள ஷிங்குவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சீ வெய்கு என்பவரால் வடிவமைக்கப்பட்டது.
- இப்பாலமானது 26.3 மீ நீளம், 3.6 மீட்டர் அகலம் ஆகியவற்றுடன் முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்டு 44 துளைகள் கொண்டுள்ள கான்கிரீட் தொகுப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மாநிலப் புலிகள் பாதுகாப்புப் படை - தெலுங்கானா

- மாநிலத்தில் புலிகளின் எண்ணிக்கையைப் பாதுகாப்பதற்காக மாநில புலிகள் பாதுகாப்புப் படையை (State Tiger Protection Force) உருவாக்க தெலுங்கானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- தலைமைச் செயலாளர் எஸ்.கே. ஜோஷி தலைமையிலான மாநில வனப் பாதுகாப்புக் குழுவானது மாநில புலிகள் பாதுகாப்புப் படையை உருவாக்கும் முடிவை எடுத்துள்ளது.
- அமராபாத் மற்றும் காவல் புலிகள் காப்பகத்தில் உள்ள புலிகளின் எண்ணிக்கையைப் பாதுகாப்பதற்காக துணைப் பாதுகாவலர் தலைமையில் 112

நபர்கள் கொண்ட மாநில புலிகள் பாதுகாப்புப் படை செயல்படும்.

- இந்தப் படைக்கான செலவை மாநில மற்றும் மத்திய அரசுகள் 40 : 60 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

# மாநிலச் செய்திகள்

## யுவ சுவாபிமான் யோஜனா

- மத்தியப் பிரதேசத்தின் நகர்ப்புறங்களில் இருக்கும் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த இளைஞர்களுக்காக "யுவ சுவாபிமான் யோஜனா" என்ற திட்டத்தை அம்மாநில முதல்வர் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் இருக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது.
- மேலும் இவர்களுக்கு திறன் பயிற்சியும் அளிக்கப்படவிருக்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சிறந்த மினி ரத்னா பொதுத் துறை நிறுவனம்

- புதுதில்லியில் நடைபெற்ற 6-வது பொதுத் துறை விருதுகள் வழங்கும் விழாவில் யுத்திசார் செயல்பாடுகள் நிதியியல் பிரிவில் சிறந்த மினிரத்னா பொதுத்துறை நிறுவனத்துக்கான விருதை நுமாலிகார்க் சுத்திகரிப்பு நிறுவனம் (Numaligarh Refinery Limited - NRL) பெற்றுள்ளது.
- NRL என்பது பாரத் பெட்ரோலியத்திற்குச் சொந்தமான அஸ்ஸாமில் உள்ள மினிரத்னா நிறுவனமாகும்.
- இது பாரத் பெட்ரோலியம், ஆயில் இந்தியா மற்றும் அஸ்ஸாம் அரசு ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாகும்.
- நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கும் பொதுத் துறை நிறுவனங்களை (PSU - Public Sector Undertakings) அங்கீகரிக்கும் விதமாக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸ்திரேலிய ஓபன் 2019

- 4 கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் முதலாவதான ஆஸ்திரேலிய ஓபன் ஆஸ்திரேலியாவின் மெல்பெர்னில் முடிவுற்றது.
- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் பின்வருமாறு:

| பிரிவு | வெற்றியாளர்கள் |
|---|---|

| | |
|---|---|
| ➢ ஆண்கள் ஒற்றையர் பிரிவு | நோவாக் ஜோகோவிக் (செர்பியா) |
| ➢ பெண்கள் ஒற்றையர் பிரிவு | நோமி ஒஸாகா ஆப் (ஜப்பான்) |
| ➢ ஆண்கள் இரட்டையர் பிரிவு | பியரி – ஹீகெஸ் ஹெர்பெரிட் மற்றும் நிக்கோலஸ் மகூட் (பிரான்ஸ்) |
| ➢ பெண்கள் இரட்டையர் பிரிவு | சமந்தா ஸ்டோசூர் (ஆஸ்திரேலியா) மற்றும் சாங் சுயாய் (சீனா) |
| ➢ கலப்பு இரட்டையர் | பர்போரா கிரேஜிகோவா (செக் குடியரசு) மற்றும் ராஜீவ் ராம் (அமெரிக்கா) |

❖ ஆஸ்திரேலிய ஓபனில் 7 பட்டங்களை வென்ற முதலாவது நபராக செர்பியாவைச் சேர்ந்த நோவாக் ஜோகோவிக் உருவெடுத்துள்ளார்.




❖ ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியைத் தவிர பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓபன் ஆகியவை இதர கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளாகும்.

# முக்கிய தினங்கள்

## உலக தொழுநோய் தினம் – ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை

❖ சர்வதேச அளவில் ஹன்சன் நோய் அல்லது தொழுநோய் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் கடைசி ஞாயிற்றுக்கிழமையும் உலக தொழுநோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

❖ 2019 ஆம் ஆண்டில் உலக தொழுநோய் தினம் ஜனவரி 27 ஆம் தேதி நிகழ்ந்தது. மேலும் இத்தினம் இந்தியாவில் ஜனவரி 30 (மகாத்மா காந்தியின் நினைவு தினம்) அன்று அனுசரிக்கப்படவிருக்கிறது.

❖ இந்த ஆண்டின் இத்தினமானது குழந்தைகளில் தொழுநோய் தொடர்பான குறைபாடுகளற்ற (சுழியம்) இலக்கின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.

❖ மிகக் கொடுமை வாய்ந்த பழமையான இந்த நோய் குறித்து சர்வதேச அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் இந்த தினமானது 1954 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கொடையாளர் மற்றும் எழுத்தாளரான ரோல் பூலரோ என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

- - - - - - - - - - - - - - -